Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 06, 2024

புதன்கிழமை நவம்பர் 06, 2024 | ஒளி: 10 கதிர்: 087 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## இரண்டு நாட்களுக்கு சந்தர்ப்பம் உண்டு

தபால் வாக்குகளை அளிக்கமுடியாத அரசு ஊழியர்கள் இருந்தால், எதிர்வரும் 7ஆம் 8ஆம் திகதிகளில் அந்தந்த மாவட்டத்தில் உள்ள தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் தபால் வாக்களிக்கலாம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, செவ்வாய்க்கிழமை (5) தெரிவித்தார்.

2,263 விகாரைகளில் வாக்குப்பதிவு நடைபெறவிருந்த நிலையில்,

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள்

# ட்ரையல்-அட்-பார் தொடரும்

### உயர் நீதிமன்றம் உத்தரவு; பிரதிவாதிகளுக்கும் அழைப்பு



புலனாய்வு தகவல்கள் கிடைத்தும், உயிர்த்த ஞாயிற்றுத் தாக்குதலைத் தடுக்கவில்லை எனக் குற்றச்சாட்டி, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில், அவ்விருவரையும் விடுவித்துத் தீர்ப்பளித்த வழக்கின் தீர்ப்பை வலுவற்றதாகிய உயர்நீதிமன்றம், இந்த வழக்கின் பிரதிவாதிகளை அழைக்குமாறு செவ்வாய்க்கிழமை (05) உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் தாக்கல் செய்த இரண்டு மேல்முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பை அறிவிக்கும் போதே உயர் நீதிமன்றம் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தது.

தொடர்ச்சி P2

## "அரசின் இலக்குகளை அடைய, மாற்றப்பட வேண்டும்"

அடுத்த ஐந்து வருடங்களில் கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழித்து, கிராமிய மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துடன் ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (05) பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் அந்த வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவு மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க,



தொடர்ச்சி P2



## காணிகள் தொடர்பில் பிரதமரிடம் மகஜர்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு- கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை மீட்டுத் தருமாறு தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை வடமாகாண ஆளுநர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கடந்த மாதம் மக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, திங்கட்கிழமை (04) மாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தியின், "நாட்டைக் கட்டியெழுப்பும், நாம் ஒன்றாக திசைக்காட்டிக்கு" எனும் கருப்பொருளில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பொதுக்கூட்டம் புதுக்குடியிருப்பு தனியார் பேருந்து நிலைய வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

அக்கூட்டத்தில் சிறப்பு அதிதியாகப் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கேப்பாபுலவு காணி விடுவிப்பு தொடர்பில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் மக்களால் கையளிக்கப்பட்டுள்ளது.




## முன்னாள் மனைவியின் கார் இலக்கமே இதுவாம்

சட்ட விரோதமாக இறக்குமதி செய்து உதிரிப்பாகங்களை இணைத்துப் பொருத்தப்பட்ட பல கோடி ரூபாய் மதிப்பிலான அதிசொகுசு கார், தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்ட அவருடைய தனிப்பட்ட செயலாளருடையது என ரத்வத்தே தம்பதிகள் கூறினாலும், அந்த வாகனம் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் உடையது என்பது தெளிவாகிறது.

நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் லொஹான் ரத்வத்த விளக்கமறியலில் இருக்கிறார். அவர், அந்த வாகனத்தைப் பல ஆண்டுகளாகப் பயன்படுத்து இருக்கிறார் என்பது அம்பலமாகியுள்ளது.

மிரிஹான, அமுதேனிய மண்டப வீதியில் அமைந்துள்ள மூன்று மாடி சொகுசு வீட்டில் சந்தேகத்திற்கிடமான இலக்கத் தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று இருப்பதாகக் கடந்த மாதம் 25ஆம் திகதி மிரிஹான தலைமையக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

தொடர்ச்சி P2

## "ஜனாதிபதி மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்"



ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க கூறியதையும், அவர் என்ன செய்கிறார் என்பதையும் மக்கள் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பேன் என அவர் கூறினாலும், இன்று அவரால் அரிசியைக் கூட முறையாக வழங்க முடியவில்லை. தேங்காய்களுக்குக் கூட வரிசைகளும் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதிக்குக் காணப்படும் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க முடியும். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை. எரிபொருள் விலை, மின்சாரக் கட்டணம், வரிகள் குறைப்போம் என்றும் தெரிவித்தார். ஆனால், அவை எதுவும் நடக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

கோட்டை, ஒபேசேகரபுர தொகுதி மக்களுடனான சந்திப்பொன்று, ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் ஏற்பாட்டில், திங்கட்கிழமை (04) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எரிபொருள் விலை சூத்திரம் தவறு என கருத்து தெரிவித்த அனுரகுமார திசாநாயக்க, இன்று எரிபொருள் விலை சூத்திரத்தின் அடிமையாக மாறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## புலிகளின் சீருடையை தேடி கொழும்பு வீட்டில் சோதனை

பாணந்துறை வலன ஊழல் எதிர்ப்புப் படையின் அதிகாரிகள், சமகி ஜன பலவேகவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேரசிங்கவின் கொள்ளுப்பிட்டி - மல் வீதி வீட்டில் சோதனையை மேற்கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் சீருடையின் பாகங்கள், V8 ரக வாகனம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒ

பாணந்துறை வலன ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கோட்டை நீதவான் நீதிமன்றில் பெறப்பட்ட தேடுதல் உத்தரவின் அடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழு வீட்டுக்குச் சென்றதாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## "விருப்பு வாக்கு போட்டியை புரிந்து கொள்ள வேண்டும்"



இது தேர்தல் பிரசாரத்தில் கடைசி வாரம். இன்று வெவ்வேறு கட்சிகள் மத்தியில் நடைபெறும் போட்டி முடிந்து விட்டது. அதற்குப் பதில், இன்று டெலிபோன் அணிக்குள் போட்டி இடும் பெரும்பான்மை இன வேட்பாளர்கள், தமிழ் வாக்காளர்களின் விருப்பு வாக்குகளைத் தேடி அலைகிறார்கள். தமது தொகுதி சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், அங்கே தாம் இழந்த சிங்கள வாக்குகளை ஈடு செய்ய, தமிழ் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கரையேற தவியாய் தவிக்கிறார்கள். இந்த விருப்பு வாக்கு சூட்சுமத்தையும், தந்திரத்தையும் தமிழ் வாக்காளர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## "பிரிந்து நிற்பதால் நாமும் போட்டி"

■ எஸ்.ஆர்.லெம்பேட்




ஈரோஸ் ஜனநாயக முன்னணி கடந்த காலங்களின் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தமது ஆதரவை வழங்கி வந்த நிலையில்,தற்போது தமிழ்த் தேசிய கட்சிகள் பிரிந்து காணப்படுகின்ற நிலையில் மக்களின் ஆதரவை இழந்து வருகிறது.இதனாலேயே இம்முறை பாராளுமன்ற தேர்தலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி நேரடியாகப் போட்டியிடுவதாக மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவரும்,ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான முனியசாமி நாகரூபன் தெரிவித்தார்.

மன்னாரில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கட்சிகள் பிரிந்து காணப்படுகின்ற நிலையில், மக்களின் ஆதரவை இழந்து வருகிறது. இதனால் வாக்குகள் பிரிந்து வேறு கட்சிகளுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## ஜெரோமால் கடும் பதற்றம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மனநலம் குன்றிய சிறுவர்களுக்கான புனர்வாழ்வு நிலையத்தின் நிர்மாணப் பகுதிக்கு வந்த போதகர் ஜெரோமினுக்கும்பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும், கிராம மக்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் கடுமையான பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி -மிப்பிட்டிய பிரதேசத்தில் மனநலம் குன்றிய சிறுவர்களுக்கான புனர்வாழ்வு நிலையமொன்றை நிர்மாணிப்பதாகக் கூறி நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்குப் போதகர் ஜெரோம் சென்ற போதே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கிராம மக்களுக்கும் போதகருக்கும் இடையில் ஏற்பட்ட கடுமையான வாக்குவாதத்தை அடுத்து, நாவலப்பிட்டி பொலிஸ் அதிகாரிகள் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

இங்கு, சிறுவர்களுக்கான மறுவாழ்வு மையம் கட்டப்படும் எனக்கூறியிருந்தனர் எனினும், இந்த இடத்தில் மத வழிபாட்டுத்தலம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இங்குக் கட்டப்பட்டு வரும் கட்டுமானம் குறித்து எந்த அரசு நிறுவனத்திற்கும் தெரிவிக்கப்படவில்லை என்றும் கிராம மக்கள் குற்றம் சாட்டினர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ட்ரையல்-அட்-பார் தொடரும்

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரிதி பத்மன் சூரசேன (தலைவர்), யசந்த கோதாகொட, குமுதுனி விக்ரமசிங்க, மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த தீர்ப்பை அறிவித்துள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்களின் தீர்ப்பை, நீதியரசர் பிரிதி பத்மன் சூரசேன, முழாமின் தலைவர், திறந்த நீதிமன்றத்தில் அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின், குற்றப்பத்திரிகைகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றங்களை நிறுவுவதற்கு அரசுத் தரப்பு சாட்சியங்கள் தவறியதன் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் குற்றஞ்சாட்டப்பட்ட இருவரையும் ஒரு தற்காப்பு இல்லாமல் விடுவிக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்ற (ட்ரயல்-அட்-பார்) 2022 பெப்ரவரி 18 அன்று உத்தரவிட்டிருந்தது.

2019 ஏப்ரல் 7ஆம் திகதி முதல் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்க தவறியமை மற்றும் சட்டவிரோதமாகப் புறக்கணித்தமை தொடர்பில் சட்டமா அதிபர், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக 855 குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

# இரண்டு நாட்களுக்கு சந்தர்ப்பம் உண்டு

2,203 விகாரைகளில் மட்டுமே வாக்குச்சாவடிகளை அமைக்க முடியும் என்றும், 45 விகாரைகளில், போயா பூஜை நடைபெறுகின்றது. 15 விகாரைகளில் வேறு காரணங்களுக்காகவும் வாக்களிப்பு நிலையங்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# “அரசின் இலக்குகளை அடைய, மாற்றப்பட வேண்டும்”

அரச அதிகாரிகளின் அனுபவமானது அதற்கு பெரும் உறுதுணையாக இருப்பதாகவும் தெரிவித்தார். அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் அரச சேவைகள் செயற்படும் விதத்திற்கும் இடையில் சில இடைவெளி காணப்படுவதாகவும், நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு இதுவரையில் அரச நிர்வாகம் செயற்பட்டு வந்த விதத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், நாட்டில் மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது அரசாங்கத்தின் முக்கிய பணி எனவும், மோசடி மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் திட்டங்களை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன், அரச சேவையில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும், அரச உத்தியோகத்தர்களுக்கு சுதந்திரமாகச் செயற்படுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பிரதேச அபிவிருத்திக்காக அரச அதிகாரிகளுக்கு விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, மக்கள் சேவைகளைக் குறைக்காமல் அரச சேவையில் மேற்கொள்ளப்படும் தேவையற்ற செலவுகளைக் குறைக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் மகேஷ் கம்மன்பில, செயலாளர் ஜயவீர பெர்னாண்டோ உட்பட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

# முன்னாள் மனைவியின் கார் இலக்கமே இதுவாம்

அந்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கார் நிறுத்தப்பட்டிருப்பது முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவியான ராஷி பாபா ரத்வத்தவின் வீடு என்பது தெரியவந்துள்ளது.

அதன் பிரகாரம் அவரது தொலைபேசி இலக்கத்தைக் கண்டுபிடித்த பொலிஸார், அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்ட தனிப்பட்ட செயலாளரான சஞ்சீவ பஸ்நாயக்க? கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் தமக்குத் தெரிவித்துவிட்டு காரை தனது வீட்டில் நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பின்னர் பொலிஸார் நுகேகொட நீதவான் நீதிமன்றில் உண்மைகளை அறிவித்துக் கடந்த 26ஆம் திகதி குறித்த காரை காவலில் எடுத்துக்கொண்டனர். அப்போது இருந்தே ரத்வத்த குடும்பத்தினர் மாயமாயினர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கார் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சென்றிருந்தமையும், அவ்வேளையில், காரின் பதிவு இலக்கமும் கண்டறியப்பட்டுள்ளது. ky-6864 என்ற இலக்கமே அந்த காரில் பொருத்தியிருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தின் ஊடாக நடத்தப்பட்ட விசாரணையில், முன்னாள் இராஜாங்க அமைச்சரின் முன்னாள் மனைவியின் காரில் எழுதப்பட்டிருந்த இலக்கமே இந்த காரின் இலக்கம் என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த கார் சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவி ராஷி பாபா ரத்வத்த, நுகேகொடை கங்கொடவில பிரதான நீதவான் ருவினி ஜயவர்தனவின் உத்தரவின் பேரில், எதிர்வரும் 7ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# “ஜனாதிபதி மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்”



எரிபொருள் விலை குறைப்பதாகக் கூறிக்கொண்டு செல்வந்த உயர் வர்க்கத்தினர் பயன்படுத்தும் வாகனங்களுக்கு மட்டும் தேவைப்படும் எரிபொருளுக்கான விலையை மட்டுமே குறைத்துள்ளனர். சாதாரண மக்கள் பயன்படுத்தும் 92 ஒக்டேன் எரிபொருளுக்கான விலை குறைக்கப்படவில்லை.

கடவுச்சீட்டுக்குக் காணப்படும் வரிசைக்குத் தீர்வைத் தருவோம் என்று கூறினாலும், இன்று கடவுச்சீட்டுக்கான வரிசை அதிகரித்து வருகிறது. இவர்கள் நாட்டு மக்களை நாளுக்கு நாள் ஏமாற்றி வருகின்றார்கள். அரச உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு 6 மாதங்களும் ஒரு தடவை சம்பளத்தை அதிகரிப்பதாகக் கூறினர், என்றாலும் இதற்கான எந்த நடவடிக்கையையும் இதுவரை மேற்கொண்டபாடில்லை. இந்த இரட்டை நிலைப்பாடான அரசியலால் முழு நாடுமே ஏமாந்துபோயுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அடிமையாக நாம் செயல்பட மாட்டோம் என வாய்கிழியப் பேசிய மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் அடிமையாக மாறி சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடிவருகின்றனர். தற்போதைய ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தின் அடிமையாகச் செயற்பட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி அவ்வாறு நடந்து கொள்ளாது. இதற்கான வேலைத்திட்டம் எம்மிடம் காணப்படுகின்றன. ஆட்சிக்கு வந்தவுடன் இந்த ஒப்பந்தம் மாற்றப்படும் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# “விருப்பு வாக்கு போட்டியை புரிந்து கொள்ள வேண்டும்”

தெளிவூட்டல் அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது; கடைசியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், எமது வேட்பாளராக இருந்து சஜித் பிரேமதாசவுக்கு கொழும்பு, கம்பஹா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் வெற்றி வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தோம். நுவரெலியா மாவட்டத்தை வென்று கொடுத்தோம். இவை தமிழ் முற்போக்கு கூட்டணியின் சாதனை வெற்றிகள்.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வாக்காளர்களின் வாக்குகளை சஜித் பிரேமதாசவுக்கு பெற்றுப் பெறமுடியாத பல பெரும்பான்மை இன அரசியல்வாதிகள், இன்று டெலிபோன் சின்ன வேட்பாளர்களாக, தமிழ் விருப்பு வாக்குகளைத் தேடி ஓடி வருகிறார்கள். தமிழ் வாக்காளர்கள் முன் தோன்றி, தமிழ் மக்கள் மீது திடீர் பாசம் கொண்டு பேசுகிறார்கள். தமிழ் வாக்காளர்களைக் கண்டு பேசி கட்டி அணைக்க முயல்கிறார்கள். எப்படியாவது கொஞ்சம் தமிழ் விருப்பு வாக்குகளை வாங்கி கரையேற முயல்கிறார்கள்.

தமிழ் மக்கள் துன்பப்படும் போது, துயரப்படும் போது, கண்ணீர் விடும் போது, சிக்கல்களில் சிக்கித் தவிக்கும் போது, அது எமக்கு வலித்தது. தொடர்ந்தும் வலிக்கும். நாம்தாம் அங்கே இருந்தோம். நான்தான் எப்போதும் அங்கே இருந்தேன். இன்று தமிழ் விருப்பு வாக்குகளைத் தேடி வரும் எவரும் அங்கே இருக்கவில்லை.

அடுத்த பாராளுமன்றத்தில், அனுர நிர்வாகத்துடன் தமிழ் மக்கள் சார்பாகக் கலந்து உரையாடப் போவது தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்களும், எம்.பிக்களும் தான். தமிழ் கட்சிகள்தான். வேறு எவரும் கிடையாது. வேறு எவருக்கும் எம்மீது அக்கறை கிடையாது. இதைத் தமிழ் மக்கள் மிக நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் வாக்காளர்கள் மீது திடீர் பாசம் காட்டும் இந்த வேட்பாளர்களின் விருப்பு வாக்கு எண்களுக்கு, தமிழ் வாக்காளர்கள் தமது விருப்பு வாக்குகளைத் தவறி போயும் கொடுத்து விட்டால், களத்தில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் வெற்றி அடைய முடியாமல் போய் விடும். எமக்குப் பெரிய அளவில் சிங்கள வாக்குகள் கிடைக்கப் போவதில்லை. ஆனால், எமது விருப்பு வாக்குகளையும் வாங்கி, அதனுடன் கொஞ்சம் சிங்கள விருப்பு வாக்குகளையும் வாங்கி சேர்த்து, இவர்கள் விருப்பு வாக்கு பட்டியல் வரிசையில் மேலே போய் விடுவார்கள். தமிழ் வாக்குகளை மாத்திரம் பெறுகின்ற நாம், கடைசியில் தெரிவு செய்யப்படும் எம்.பிகளை தீர்மானிக்கும் விருப்பு வாக்கு பட்டியல் வரிசையில் பின்தங்கி விடுவோம். ஆகவே, இது எமது விரல்களால், எமது கண்களையே குத்திக் கொள்வதாகும்.

ஆகவே, இந்த விருப்பு வாக்கு சூட்சுமத்தையும், தந்திரத்தையும் தமிழ் வாக்காளர்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். டெலிபோன் சின்னத்துக்கு வாக்களித்து விட்டு, அந்த பட்டியலில், புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் கூட்டணி வேட்பாளர்களாகப் போட்டியிடும் எமது தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்குத்தான் தமது விருப்பு வாக்குகளை முன்னுரிமை அளித்து வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.



# “பிரிந்து நிற்பதால் நாமும் போட்டி”

**“ ஈரோஸ் ஜனநாயக முன்னணிக்கு வாக்களித்து எங்களைப் பாராளுமன்றம் அனுப்புவதன் ஊடாக மக்களுக்கு எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வை பெற்றுத் தர முடியும்**

இந்நிலையில், குறித்த வாக்குகள் வேறு கட்சிகளுக்குப் பிரிந்து செல்லாமல் இருக்கவும் அந்த வாக்குகளை நாங்கள் பெற்றுக் கொள்ளும் முகமாக ஈரோஸ் ஜனநாயக முன்னணி வன்னியில் போட்டியிடுகின்றது.

தமிழ்த் தேசிய கட்சிகள், கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எதிர்க்கட்சி அரசியலை மேற்கொண்டு வந்தமையினால் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். எமது கட்சி பாராளுமன்ற தேர்தலில் ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஆழ்கின்ற கட்சியுடன் இணைந்து மக்களுக்குப் பொருளாதார ரீதியாக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

“ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மாவீரர் எனது தந்தை. அவர் போராட்டம் மூலமாகச் செய்ய முடியாத சில காரியங்களை நான் அரசியல் ரீதியாக முன்னெடுக்கவுள்ளேன். அதற்காகவே நான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்” என்றார்.

தமிழ்த் தேசிய கட்சிகளுக்குள் காணப்படும் உள் பூசல்கள் ,கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரிவு மற்றும் வேட்பாளர்களுக்கு இடையிலான பிரச்சினைகள் வடக்கு கிழக்கில் காணப்படுகின்றது.வன்னி மாவட்ட மக்கள் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது காற்றாலை மின் உற்பத்தி,கனிய மணல் அகழ்வு,மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை,விவசாயிகள் பிரச்சினை உட்பட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்கு எமது கட்சி முழுமையாகச் செயல்பட்டுத் தீர்வை பெற்றுக் கொடுக்கும்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஒரு தமிழ்த் தேசிய கட்சி என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன். எனவே, ஈரோஸ் ஜனநாயக முன்னணிக்கு வாக்களித்து எங்களைப் பாராளுமன்றம் அனுப்புவதன் ஊடாக மக்களுக்கு எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வை பெற்றுத் தர முடியும் என்றார்.

# புலிகளின் சீருடையை தேடி கொழும்பு வீட்டில் சோதனை


இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் இல்லை எனவும், வீடு மூடப்பட்டிருந்ததாகவும், ஊழியர் ஒருவரே அங்கு இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

மேலும், வீட்டின் பகுதியில் மூன்று பழைய வாகனங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும், சுமார் 2 மணிநேரம் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஊழியரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

தான் வீட்டில் இல்லாத நேரத்தில், பாணந்துறை வலான ஊழல் தடுப்புப் படையைச் சேர்ந்தவர்கள் என்று கூறி வந்த சிலர் வீட்டைச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். உண்மையிலேயே காவல்துறை அதிகாரிகளா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென, கொள்ளுப்பிட்டிய பொலிஸில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர், சட்டத்தரணி நிஹால் பதிவாவிடம் கேட்டபோது

பாணந்துறை வலன ஊழல் ஒழிப்பு செயலணியின் அதிகாரிகள் நீதிமன்றத் தேடுதல் உத்தரவுக்கு அமையவே அங்கு தேடுதலை நடத்தியுள்ளனர் என்றார்.



# ஜெரோமால் கடும் பதற்றம்

என அனைத்துப் பிரஜைகளும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருவதாகவும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் இவ்வாறானவர்களுக்கு நாவலப்பிட்டி பிரதேசத்தில் நிலவும் அமைதியைச் சீர்குலைக்க இடமளிக்கப்பட மாட்டாது எனவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளார்.

கிராம மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் போதகர் ஜெரோம் மற்றும் அவரது பாதுகாப்புப் பணியாளர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

# “அமைச்சுகளை வலிந்து பெற முயற்சி”

■ நிதர்ஷன் வினோத்



அநுரகுமார தலைமையிலான அரசிற்கு வலிந்து சென்று, ஆதரவை வழங்கி, அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்குத் தமிழரசுக் கட்சி தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதாக ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளருமான சுரேன் குருசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே சுரேன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

முக்கியமான ஒரு தேர்தலில் பல்வேறு கட்சிகள் சுயேச்சை குழுக்கள் போட்டியிடுவது தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவே என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு போட்டியிடும் பல தரப்பினரும். தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத்திச் செயற்படுவதாகத் தெரியவில்லை. தங்களுடைய பதவிகளைப் பெறுவதற்காகத் தான் என்பது தெளிவாகின்றது.

ஆகவே, தமிழ் மக்கள் மிகவும் அவதானமாகச் சிந்தித்து தமிழ்த் தேசியக் கொள்கையுடன் பயணிக்கும் வடக்கு, கிழக்கு முழுவதும் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்கிற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். அதுதான் தமிழ் மக்களின் பலமான பிரதிநிதித்துவத்தையும் எதிர்பார்க்கிற மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

தென்னிலங்கை நிகழ்ச்சி நிரலோடு தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு அதன் போர்வையிலே பயணிக்கின்றவர்களை அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை கட்சியோடு சேர்ந்து வாக்கு கேட்டவர்கள் இப்போது தமக்கு வாக்களிப்பது தான் தமிழ்த் தேசியம் என்று சொல்லி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இந்தநிலையில், தெற்கில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் தங்களுடைய கட்சியினருக்கு மாத்திரம் அமைச்சுப் பதவிகளை வழங்குவோம் என்று கூறி வருகின்ற சூழலில், தமிழ் தரப்பிலே தேசியம் பேசிக் கொண்டிருக்கும் கட்சிகள் தாங்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறுவது தொடர்பில் பரிசீலிப்போம் சேர்ந்து பயணிக்கத் தயாராக இருக்கிறோம் என கூறுகின்றனர்.

அதுவும் வேண்டாம் என்று கூறுகின்ற அரசாங்கத்திடம் வலிந்து சென்று, ஒரு பிச்சை கேட்பது போல, அமைச்சுப் பதவிக்காக தங்களுடைய பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆகவே, தமிழ் மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அதாவது சுயேச்சைகள் மாத்திரமல்ல, தேசியம் பேசுகிறவர்களும் தெற்கில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கக் கூடியவர்கள் பதவி கொடுக்க விட்டாலும், முழங்காலில் நின்று கூட இந்தப் பதவிகளைப் பரிசீலிக்கிறோம், எதிர்பார்க்கிறோம், ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று கூறுகின்றனர்.

தங்கள் பதவிகளுக்காகத் தேசியம் பேசி ஏமாற்றுபவர்களை நிராகரித்து ஒற்றுமையாக ஒரே கூட்டணியாகப் போட்டியிடும் எமது கூட்டணியை ஆதரித்துப் பலப்படுத்துங்கள் என்றார்.

## 62 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா



சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை வைத்திருந்த 62 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர். எஸ்.ஐ.எம்.கபீர் செவ்வாய்க்கிழமை (05) தெரிவித்தார்.

விசேட டெங்கொழிப்பு கட்டுப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, சுமார் 1,514 இடங்கள் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் இதில் 298 இடங்கள் துப்புரவு செய்யப்பட்டதாகவும், 375 இடங்கள் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, 45 இடங்களில் குடம்பிகள் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு ஒரு வாரக் காலத்திற்குள் துப்புரவு செய்ய வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் தெரிவித்த அவர், வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒரு வார காலத்திற்குள் காணிகளை டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்கும் பொருட்டு துப்புரவு செய்ய வேண்டும் எனவும் அறிவித்துள்ளார்.

## இடைவேளையில் வந்த கொம்பன்; வெளியேறிய மாணவர்கள்

கலென்பிந்துனுவெ வ-கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் உள்ள பன்டுலுகம மகா வித்தியாலயத்திற்குள் செவ்வாய்க்கிழமை (05) 11.30 மணியளவில் கொம்பன் யானை ஒன்று வந்ததால் பாடசாலைக்குள் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலையில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு வந்த கொம்பன் யானையைப் பார்த்ததும் மாணவர்கள் படிப்பை நிறுத்திவிட்டு பாடசாலையை விட்டு வெளியே வந்துள்ளதுடன், பின்னர் அக்கம் பக்கத்தினர் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் வந்து யானையை விரட்டியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபர் கருத்து தெரிவிக்கையில், யானை வேலி ஒன்றை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



## பொடி லேசியின் துப்பாக்கியுடன் முன்னாள் சிப்பாய் கைது


தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான உனகொருவே ஜப்பான் சாந்த, தற்போது சிறையில் இருக்கும் பொடி லேசி ஆகியோரின் சட்டவிரோதமான துப்பாக்கியை வைத்திருந்த முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அம்பிலிபிட்டிய கொத்தலாவல பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவ வீரர் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து ஏகே47 துப்பாக்கி, 25 தோட்டாக்கள், 01 மகசின், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 01 மகசின், 01 துப்பாக்கி, 9mm ரகத் துப்பாக்கிகள் 07, மகசின், 02 வாள்கள், ரம்போ கத்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் எந்தவொரு குற்றச் செயலிலும் ஈடுபடும் வகையில் துப்பாக்கி, வாள், கத்தி போன்ற ஆயுதங்களை அணிந்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## வாகன விபத்தில் ஒருவர் காயம்



ஹொரணை - களுத்துறை வீதி 16ஆவது கிலோ மீற்றர் மைல்கல் பகுதியில் திங்கட்கிழமை(04) இரவு கார் ஒன்று எதிர்த்திசையில் முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டியின் சாரதிகாயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டி, வீதியை விட்டு விலகி, அருகிலிருந்த சுவரில் மோதி விபத்துக்குள்ளானதாகவும்

காரின் சாரதி கட்டுப்பாட்டை இழந்த காரணத்தினாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

விபத்தின் போது, முச்சக்கரவண்டியின் சாரதி காயமடைந்துள்ள நிலையில், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஐஸுடன் தாய்லாந்து பெண் கைது



மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து வந்த தாய்லாந்து பெண் ஒருவர் தனது பயணப் பையில் மறைத்து வைத்திருந்த 197 கிராம் ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) கைது செய்யப்பட்டுள்ளார்.

33 வயதான குறித்த பெண், 5 கிலோ கிராம் போதைப்பொருளுடன், BIA போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் பயணப் பையில் உணவுப் பொதிகளுடன் போதைப்பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அதிகாரிகளால் சோதனையின் போது போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர் திங்கட்கிழமை(4) இரவு சுமார் 11.55 மணி அளவில் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானம் SQ468 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சிங்கப்பூர் வழியாக இலங்கை வந்தடைந்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 100 மில்லியன் ரூபாய் என சுங்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் சம்பவம் தொடர்பில் உதவி கோரியுள்ளதுடன், கைது செய்யப்பட்ட பெண் குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## வாகன விபத்தில் யுவதி பலி



பண்டாரகம - பாணந்துறை வீதி பொல்கொட பிரதேசத்தில் முச்சக்கர வண்டியொன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த 23 வயதுடைய நுவாங்கி இந்துனில் என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த யுவதி தனது தாய் மற்றும் முச்சக்கர வண்டியின் சாரதியான தந்தையுடன், பாணந்துறை- மாலைமுல்ல பிரதேசத்தில் உள்ள விகாரையொன்றுக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

## கர்ப்பிணியுடன் கவிழ்ந்த லொறி



ஹட்டன் - பொகவந்தலாவ பிரதான வீதியின் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலைக்கு அருகில் வைத்து செவ்வாய்க்கிழமை (05) நண்பகல் 12 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கர்ப்பிணிப் பெண்ணை அவரது கணவர் லொறியில் ஏற்றி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளதுடன், மருத்துவப் பணிகள் நிறைவடைந்ததும் கர்ப்பிணிப் பெண் வந்து லொறியில் அமர்ந்திருந்துள்ளார். இதன்போது சாரதியின்றி குறித்த லொறி முன்னோக்கிச் சென்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது.

விபத்தில் குறிக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், கர்ப்பிணிப் பெண்ணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்த பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 20 அடி பள்ளத்தில் கவிழ்ந்துள்ளதுடன், இதன்போது லொறிக்குள் இருந்த கர்ப்பிணி பெண் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அறுத்தவர்கள் தப்பியோட்டம்; 60 கிலோ கிராம் இறைச்சி மீட்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி-பாலமுனை பிரதேசத்தில் ஒருவருக்குச் சொந்தமான காணியில் கட்டப்பட்டிருந்த இரு மாடுகளை திருடிச் சென்று பாலமுனை நடுவோடையிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் வைத்து அவற்றை அறுத்து வெளியாருக்கு விற்பனை செய்த நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ஏ.ரஹீம் தெரிவித்துள்ளார்.

சுற்றிவளைக்கப்பட்ட இடத்திலிருந்து சந்தேக நபர்கள் தப்பியோடி உள்ள நிலையில், அவர்களால் அறுக்கப்பட்ட சுமார் 60 கிலோ கிராம் இறைச்சி மற்றும் உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மாட்டு இறைச்சியானது, நீதிமன்ற உத்தரவின் பேரில், பொலிஸாரால் அழிக்கப்பட்டதாகவும் உபகரணங்கள் நீதிமன்ற பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.



# தேங்காய் இல்லாத தெங்கு முக்கோண வலயம்

இலங்கை வரலாற்றில் தேங்காய் விலை இந்தளவுக்கு உயர்ந்த ஒரு காலகட்டம் இருந்ததில்லை. 1970இல் ஒரு தேங்காய் 5 காசுக்கு விற்கப்பட்டதாகவே அறியமுடிகின்றது. அந்தக் காலத்தில் இன்று போல் அல்ல, நல்ல அளவில் பெரிய பொருளாகத் தேங்காய் இருந்தது.

அக்காலகட்டத்தில் இலங்கையின் 3 முக்கிய ஏற்றுமதிப் பயிர்களில் தென்னையும் ஒன்று. இன்று நாம் தேங்காய் மூலம் பெற்ற ஏற்றுமதி வருமானத்தில் 1% கூட கிடைப்பதில்லை.

70 சதவீதமான தேங்காயை வெளிநாடுகளுக்கு அனுப்ப அனுமதித்தாலும் நடைமுறையில் நடக்காது. இலங்கையில் இவ்வளவு பெரிய தென்னை கைத்தொழில் நஷ்டம் ஏற்பட்டமையே அதற்குக் காரணம். ஒருவேளை கொப்பரையை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறப்படுகிறதோ, அப்படியானால், மிக அதிக விலைக்குக் கொப்பரை வெளிநாடு செல்கிறது. அதிலிருந்து இலங்கைக்கு டொலர்கள் கிடைக்கின்றன.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய்யில் 4,000 ரூபாய் இலாபம் கிடைக்கிறது. இந்த 4,000 ரூபாய் மற்றும் 2,000 ரூபாய் ஏனைய செலவுகள் டொலரில் இலங்கைக்கு வருகின்றன. எனவே, நாம் தேங்காய்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் குறை கூறாமல், தென்னை உற்பத்தியை மேம்படுத்த வேண்டும்.

ஐ.நா. சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் 2018இல் வெளியிடப்பட்ட புள்ளிவிபரத் தாளின்படி, அந்த ஆண்டில் இலங்கை 2,623,000 தொன் தேங்காய்களை உற்பத்தி செய்துள்ளது. அதன்படி, உலகில் தேங்காய் உற்பத்தியில் இலங்கை 4ஆவது இடத்தில் உள்ளது. 2024இல் இந்த எண்ணிக்கை கணிசமாகக் குறையும் என்பது எங்கள் நம்பிக்கை.

தென்னை நிலத்தை நில ஏலதாரர்கள் துண்டாடி விற்பனை செய்வதுதான். தென்னை நிலத்தைச் சதி செய்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அங்கு மரங்களை வெட்டவும், வீடு கட்டவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏலதாரர்கள் அதற்கான வழிகளைக் கண்டுபிடித்து வருகின்றனர். சில சமயங்களில் தென்னை மரத்தின் வேரைத் தோண்டி நச்சு இரசாயனங்களைப் பயன்படுத்தி மரத்தைக் கொன்று விடுவார்கள்.

வேறு சிலர் தென்னை மரங்களை வேரோடு பிடுங்கி நிலத்தை ஏலம் விடுகின்றனர். மற்றவர்கள், தென்னை மரங்களுடன் சேர்ந்து, தோட்டத்தை ஏலம் விடுகின்றனர். இதனை வாங்கும் மக்கள் தென்னை மரங்களை அமைதியாக வெட்டி அங்கேயே வீடுகளைக் கட்டுகிறார்கள்.

அவர்கள் மீது வழக்குப் போடுவதில் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில், கட்டப்பட்ட வீடுகள் உடைக்கப்படவில்லை. வெட்டப்பட்ட தென்னை மரங்கள் மீண்டும் நடப்படாது. அதனால், தென்னை தொழில் மிகவும் மோசமாகி விட்டது. சில தென்னை நில உரிமையாளர்கள் தங்கள் நிலத்தில் தென்னை வண்டுகள் தாக்கும் என ஆவலுடன் காத்திருக்கின்றனர். இதற்கு காரணம் தென்னை வண்டுகள் தென்னை மரங்களின் உச்சியை அழிக்கும் போது, ஆட்டம் இன்றி மரங்களை வெட்ட முடிகிறது.

50 ஆண்டுகளுக்கு முன்பு, இந்த நாட்டில் தேங்காய் முக்கோணம் என்று ஒரு பகுதி இருந்தது. தென்னைத் தொழில் பரவலாக நடைமுறையிலிருந்தாலும், இந்தப் பகுதியில்தான் அதிக எண்ணிக்கையில் தென்னை மரங்கள் இருந்தன. இன்றைய நிலையில், முக்கோணம் உள்ளது. ஆனால் தேங்காய் இல்லை என்பதுதான் உண்மை.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# சந்தர்ப்ப சூழ்நிலையும் சந்தர்ப்பவாதமும்



எம்.எஸ்.எம்.ஐயூப்

அனுரகுமார தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல் தமிழ் மக்கள் முன் இரண்டு விஷப் பரீட்சைகளை எதிர்நோக்கினார். இரண்டும் மனித உரிமைகள் தொடர்பானதாகும். அவ்விரண்டிலும் அவர் தோல்வியடைந்தார்.

முதலாவதாக, ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை விடயத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அவரது அரசாங்கம் நிராகரித்தது. இரண்டாவதாக, அருகம்பேயில் இஸ்ரேலிய உல்லாச பிரயாணிகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விடயத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை உபயோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அடுத்த பாராளுமன்றத்திலேயே அச்சட்டத்தைப் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித்த ஹேரத் ஊடகங்களிடம் தெரிவித்தார். இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அச்சட்டத்தை தொடர்ந்தும் பாவிப்பதை எதிர்த்து கருத்து தெரிவித்திருந்தார். அத்துடன், மக்கள் விடுதலை முன்னணி பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்த்து வந்துள்ளது.

அதேபோல், ஆயுதப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர்க் காலத்தில் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க தமது கட்சி தவறிவிட்டது என்றும் அதற்காக வருந்துவதாகவும் இதற்கு முன்னர் அனுர பலமுறை கூறியிருந்தார். அவ்வாறாயின், இந்த இரண்டு விடயத்திலும் இப்போது அவரது அரசாங்கம் ஏன் வேறு விதமாக நடந்து கொள்கிறது என்ற கேள்வி எழுகிறது. இது கொள்கை மாற்றமா அல்லது சூழ்நிலையின் நிர்ப்பந்தமா என்பதே பலர் எழுப்பும் கேள்வியாகும்.

இவ்விரண்டு விடயங்களிலும், குறிப்பாக ஜெனிவா விடயத்தில் பெரும்பான்மையினர் தமிழர்களின் நிலைப்பாட்டுக்கு எதிராகவே இருக்கின்றனர்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தால் 76 வருடங்களாக நாட்டை ஆட்சி புரிந்த ஊழல் பேர்வழிகள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றலாம். அதேவேளை, ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டு நாடு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படலாம். எனவே, இது அக்கட்சிக்கு ஒரு விஷப் பரீட்சையாகும்.இது இருப்பை கைவிட்டுக் கொள்கையைப் பாதுகாப்பதா அல்லது கொள்கையை தற்காலிகமாகவேனும் கைவிட்டு இருப்பை பாதுகாத்துக் கொள்வதா என்ற இரண்டும் கெட்ட நிலையாகும். (தேசிய மக்கள் சக்தியின் இந்த நிலைப்பாடு தற்காலிகமானதா என்பதைப் பின்னர் தான் தெரிய வரும்.)

மேலும், சூழ்நிலையின் கைதிகளாவது அரசியலில் புதிய விடயமல்ல, தமிழ் தலைவர்கள் ஒவ்வொரு தேசிய மட்டத் தேர்தலிலும் இந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவர்கள் கொள்கையைப் பேசுவார்கள். ஆனால், அதற்கு மாற்றமாக நடந்து கொள்வார்கள். 2010 முதல் நாம் இந்நிலையைக் காண்கிறோம்.

2009இலேயே உள்நாட்டுப் போர் முடிவடைந்தது. புலிகளை அழிப்பதில் அப்போதைய இராணுவ தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவின் தந்திரோபாயங்களே பிரதான காரணமாகின. போர் முடிவடையும் தறுவாயில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவும் இதனை ஒரு நேர்காணலில் கூறியிருந்தார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களே இன்றும் சர்வதேச ரீதியாகவும் பேசுபொருளாக இருக்கின்றன. பொதுமக்களும் போராளிகளும் முல்லிவாய்க்காலில் ஒன்றாகக் கலந்திருந்த நிலையில், அப்பிரதேசத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பாரியளவில் உயிர்ச் சேதம் ஏற்பட்டது. அப்போது, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பற்றிய பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து இல்லாவிட்டாலும், பாரிய அழிவு ஏற்பட்டது என்பதை மறுப்போர் எவரும் இல்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அது நடந்தாலும், அந்த தாக்குதலைத் திட்டமிட்டவரும் மேற்கொண்டவரும் பொன்சேகாவே. புலிகளின் தலைமை அழிக்கப்பட்டதன் பின்னர், முழு வன்னி நிலப்பரப்பிலிருந்தும் அகற்றப்பட்ட மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டனர். கண்ணிவெடிப் பிரச்சினையால் உடனடியாக அவர்கள் வீடு செல்ல அனுமதிக்காமை நியாயமாக இருக்கலாம். ஆனால், அவர்கள் முகாம்களிலிருந்த போது, புலிகள் என சந்தேகிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் காணாமலாக்கப்பட்டமை தமிழ் தலைவர்களுக்குத் தெரியாத விடயமல்ல.

இந்த சோதனைத் திட்டம் மகிந்த ராஜபக்ஷவினுடையதா அல்லது பொன்சேகாவினுடையதா? போர்க் களத் திட்டங்களில் ஒன்று என்பதால் அது இராணுவத் தளபதியினுடையதாகத் தான் இருக்க வேண்டும். ஏழு மாதங்களில் இதனை மறக்க முடியுமா? 2009 மே மாதம் 19ஆம் திகதி போர் முடிவடைந்தது, 2010 ஜனவரி 26ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் பொன்சேகாவுக்கே வாக்களித்தனர். அது குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழிகாட்டலிலேயே இடம்பெற்றது.

ஒரு வகையில் பார்த்தால், இதனைச் சூழ்நிலையின் நெருக்குதல் என்றும் கூற முடியாது. மகிந்தவை எதிர்ப்பதற்காக பொன்சேகாவை ஆதரிக்க வேண்டிய இக்கட்டான நிலைமை உருவாகியிருக்கவில்லை. அதேவேளை, பொன்கேவை ஆதரித்து மகிந்தவை தோல்வியுறச் செய்யும் வாய்ப்பும் அப்போது இருக்கவில்லை. தமிழ் மக்கள் எதிராக வாக்களித்தும் மகிந்த வெற்றி பெற்றார். அவரது கட்சியும் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அடைந்தது.

பொன்சேகா, அத்தேர்தலில் வெற்றி பெறுவதால், தமிழ் மக்கள் எவ்வித நன்மையையும் அடையவிருக்கவுமில்லை. ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவில் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதன் காரணமாகவே தமிழ் தலைவர்கள் அப்போது பொன்சேகாவை ஆதரிக்க முற்பட்டனர். இது கொள்கை ரீதியாகச் சரியா என்பதே இங்கு எழும் கேள்வியாகும்.

இதனையடுத்து, 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் ஐ.தே.க. ஆதரவில் போட்டியிட்ட மைத்திரிபாலவுக்கே தமிழ் மக்கள் வாக்களித்தனர். அந்த அரசாங்கம் 2015 மற்றும் 2017ஆம் ஆண்டும் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட பிரேரணைகளுக்கு இணை அனுசரணை வழங்கியது. ஆனால், 2016 ஜனவரி மாதமே அரசாங்கம் அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல் மனித உரிமை தொடர்பான விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளை அழைக்க மறுத்து விட்டது.

2016 ஜனவரி 21ஆம் திகதி பி.பிசியுடனான நேர்காணலின்போது, "இந்த விடயத்தில் வெளிநாட்டுத் தலையீட்டுக்கு நான் ஒருபோதும் இடமளிப்பதில்லை" என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.

வெளிநாட்டு நீதிபதிகள் "கலந்து கொள்வதையே" மனித உரிமை பேரவையின் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அதே மாதம் 31ஆம் தகதி கொழும்பில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுநலவாய ஆசியப் பிராந்திய கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினார். இறுதியில் அந்த ஆட்சியின்போது, அந்தப் பிரேரணை விடயத்தில் பெரிதாக எதுவும் நடைபெறவில்லை.

ஆயினும், தமிழரசுக் கட்சி 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் ஐ.தே.கவையே ஆதரித்தது. இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வு என்ற நிபந்தனையை விதித்துவிட்டே அக்கட்சி அவ்வாறு செய்தது. அதேபோல், இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் அதே நிபந்தனையை விதித்து விட்டு அதனை ஏற்காத சஜித் பிரேமதாசவை ஆதரித்தது.

முஸ்லிம் கட்சிகளின் நிலைமையும் இதுவாகவே இருக்கிறது. முஸ்லிம் சமூகம் என்ற கருவறையிலேயே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்திய தீவிரவாதம் தோன்றியது. எனவே, முஸ்லிம் சமூகமே அதற்கான பரிகாரத்தைக் காண வேண்டும் என்று அனுரகுமார 2019 பாராளுமன்றத்தில் கூறினார். அந்த உரையை திரிபுபடுத்திய ரவூப் ஹக்கீம் ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணினது கருவறையிலும் தீவிரவாதம் தோன்றுகிறது என்று அனுரகுமார கூறியதாக ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மேடையில் கூறினார்.

இதற்கு எதிராக அனுரகுமார வழக்குத் தாக்கல் செய்ய முற்படவே, தமது கூற்று முஸ்லிம்கள் மத்தியில் பரவியதன் பின்னர், அவர் தாம் அனுரவின் உரையைப் பற்றிக் கூறியது பிழையென ஏற்றுக்கொண்டார். அதற்குப் பின்னரும் ரிஷாத் பதியுதீனும் அனுரவின் உரையை திரிபுபடுத்திக் கூறினார். ஆயினும் முஸ்லிம்களுக்கு எதிராக மிக மோசமாக இனவாதம் பேசிய ஆனந்த சாகர தேரரை மேடையேற்றிய சஜித் பிரேமதாசவை அவர்கள் ஆதரித்தனர்.

2019 தேர்தலில் பொதுஜன முன்னணியை மிக மோசமாக விமர்சித்த சில முஸ்லிம் தலைவர்கள் பின்னர் எவ்வித வெட்கமுமின்றி அம்முன்னணியின் அரசாங்கத்தில் இணைந்து கொண்டனர். இவை எவ்வகையிலும் சூழ்நிலையின் நெருக்குதல் அல்ல.



## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்து விடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் எவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

# தற்காலிக வியாபாரிகளால் பாரிய பாதிப்பு



தீபாவளி பண்டிகை காலத்தில் ஹட்டன் நகரில் வியாபாரம் மேற்கொண்ட தற்காலிக வியாபாரிகளால் ஹட்டன் நகரின் சுற்றாடலுக்கு பாரிய பாதிப்பும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்த வியாபாரிகள் தங்களுடைய தற்காலிக கடைகளை அகற்றி விட்டு, பொலித்தீன், அட்டை பலகைகள் போன்றவற்றை நகர் முழுவதும் விட்டுச் சென்றதால் இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளது.

நகரத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே குப்பைகள் காணப்படுகிறது மேலும் பொலித்தீன் குப்பைகளை கண்ட இடங்களில் வீசப்பட்ட நிலையில் உள்ளது.

இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

– செ.தி.பெருமாள்

## மலையகம் 200: பெருந்தோட்டத் தொழிலாளர்களது

# வரலாறும் சமூக உருவாக்கமும்



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியினை சார்ந்தும், அதனை அடுத்தும் மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியானது ஏனைய ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க , பிராந்தியங்களில் உள்ள நாடுகளை தமது காலணித்துவ நாடுகளாக ஆக்கிக்கொள்ள பிரித்தானியாவிற்கு பெரிதும் உதவின.

மேலும், மேற்கத்திய நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இக்காலனித்துவ நாடுகளின் சமூக, பொருளாதார அமைப்புகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இதற்காக மேற்கத்திய நாடுகளின் அரசியல், பொருளாதார, கலாசார, மத, கல்வி, யுத்த அமைப்புகள் ஆகிய அனைத்துமே கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

ஏற்கெனவே இருந்த தேவைகளுக்காக மூலதனம் பயன்படுத்தப்பட்டது.

சிலரிடம் மூலதனம் குவிந்ததன் காரணமாக, சந்தையில் புதிய பொருட்களுக்கு கிராக்கியும் ஏற்படுத்தப்பட்டது.

மக்கள் மத்தியில் புதிய சுவைகள் அறிமுகப் படுத்தப்பட்டு, அவை அன்றாட வாழ்க்கைக்கும், சமூக அந்தஸ்திற்கும் அத்தியாவசியம் என்ற நிலை உருவாக்கப்பட்டது. இவற்றுக்காக நிரந்தர சந்தையும் உருவாக்கப்பட்டது.

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கத்திய நாட்டு மக்கள் கோப்பி, தேனீர் போன்ற பானங்கள் குறித்து அறிந்திருக்கவில்லை.

வியாபாரிகளே அவற்றை அத்தியாவசியமானதாக மக்கள் மத்தியில் உருவாக்கியவர்கள்.

கோப்பி, தேநீர் போன்ற உப நுகர்வுப் பொருட்களின் நிரந்தரத்தை சந்தையில் பாதுகாக்க வேண்டுமானால், இவற்றை சாதாரண விலையில் வழங்க முயற்சிக்க வேண்டும் .

அத்துடன், சாதாரண விலையில் அதிகளவு இலாபத்தை தேட வேண்டுமாயின், குறைந்த செலவில் இவற்றை விளைவிக்க நிலத்தினையும், தொழிலாளர்களையும் தேடியாக வேண்டும். இந்த சாத்தியக்கூறுகள் காலனித்துவ நாடுகளிலேயே இருந்தன.

ஆரம்ப காலத்தில் அமெரிக்காவில் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும், வேலை செய்வதற்காக ஆபிரிக்க மக்களை அடிமைகளாக, கப்பல்களின் மூலமாக, பலாத்காரமாக கொண்டு போய், ஏல விற்பனையின் மூலமாக பயிற்செய்கையிலும், சுரங்கங்களிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

இக்கால கட்டத்திலேயே இந்தியா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பெருந்தோட்டப் பயிர்கள் உண்டாக்கப்பட்டன.

இவ்வகையில், இந்த பயிற்செய்கையை கொண்டுள்ள இலங்கையின் மொத்த ஒழுங்குப்படுத்தப்பட்ட உழைப்பாளர் தொகையில் கிட்டத்தட்ட 1.15 வீதமான 5,14,000 தோட்டத் தொழிலாளர்களை இத்துறை உள்ளடக்கி இருந்தது.

மொத்த உழைப்பாளர் தொகையில் இவர்கள் 1/5 பங்கினை வகிப்பதனை இந்த நாட்டின் உழைப்பாளர் தொகையிலிருந்து அறிய முடியும்.

பிரித்தானியரின் பொருளாதார முறையில் ஏற்பட்ட துரித வளர்ச்சியின் காரணமாக 19ஆம் நூற்றாண்டுகளின் நடுப்பகுதியில் தோட்டங்களில் வேலை செய்யக் கூடிய கூலியாட்களை அன்றைய சிலோனுக்கு கொண்டு வர வேண்டிய தேவை பிரித்தானியருக்கு ஏற்பட்டது.

கமத்தொழில், மீன்பிடித் தொழில் போன்ற ஏனைய தொழில்களில் ஈடுபட்டிருந்த சிங்கள மக்கள் பொதுவாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் வேலை செய்ய உற்சாகம் காட்டவில்லை.

இலங்கையும் இந்தியாவும், பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலகட்டமது.

தென்னிந்தியாவில் நிலவிய வறுமை, இன, மத சாஸ்திரங்களின் கட்டுப்பாடான நிலைமை, ஜாதி ரீதியிலான ஒடுக்கு முறை, அக்காலப் பகுதியில் நிலவிய கடும் வறட்சி, இயற்கையான ரீதியிலும், செயற்கையான ரீதியிலும், ஏற்படுத்தப்பட்ட பஞ்சங்கள், நிலவரி கிஸ்தி முறை, ஆகியவற்றின் கட்டுப்பாட்டினைத் தாள முடியாது, அதிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு தப்பி ஓடுவதனையே அன்றைய மக்கள் ஒரு மாற்று வழியாக, மார்க்கமாகக் கருதினர்.

இந்த நிலைமையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பிரிட்டிஷார், வேலை செய்வதில் பெயர் பெற்ற தமிழர்களை வேலைக்காக, மலிவான கூலியில், பசப்பு வார்த்தைகளைக் கூறி அழைத்து வந்தனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் கோப்பிச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்ட இவர்கள், அத்தொழிலில் ஏற்பட்ட நட்ட நிலைமையின் காரணமாக தேயிலை செய்கையில் ஈடுபடுத்தப்பட்டனர் .

பெருந்தோட்டத் துறையில் தொழில் செய்வதற்காக மேலும் பலர் இலங்கையை நோக்கி படையெடுக்கத் தொடங்கினர். 1842ஆம் ஆண்டு 14,000 பேரும், 1843ஆம் ஆண்டு 31,000 பேரும், 1844ஆம் ஆண்டு 71,000 பேரும், 1845ஆம் ஆண்டு 67,000 பேரும் இலங்கைக்கு வந்ததாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மேற் காட்டிய வகையில் வந்த எம்மவர்களின் எண்ணிக்கையானது 1964ஆம் ஆண்டு 975,000 ஆக இருந்ததாகக் கணிக்கப்பட்டது.

இவர்களுள் தேயிலைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 1901ஆம் ஆண்டு 287,653 ஆக இருந்தது.

இதில் ஆண்களின் மொத்த எண்ணிக்கை 163,218 ஆகவும், பெண்களின் எண்ணிக்கை 124,435 ஆகவும் இருந்தது.

1911ஆம் ஆண்டு இருந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 325,531 ஆக இருந்தது.

இதில் ஆண்களின் எண்ணிக்கை 177,090 ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 148,441 ஆகவும் இருந்தது.

இதன் மூலம் நாம் அறியக்கூடியது, முதலாம் உலகப் போரின் காலகட்டத்தில் கூடுதலான தொழிலாளரும், 1914ஆம் ஆண்டு தொடக்கம் 1918ஆம் ஆண்டு வரை குறைவாகவும், மீண்டும் இரண்டாம் உலகப்போர் கால கட்டத்தில் இந்த எண்ணிக்கை கூடியும் காணப்பட்டது.

இவ்வாறான எண்ணிக்கையுடன் வந்த தென்னிந்திய மக்களின், குறிப்பாக தமிழர்களின், வருகையை பின்னோக்கி அவதானிப்பின் இவர்கள் தங்களுடைய கிராமங்களில் இருந்து ராமேஸ்வரத்திற்கும், தட்டைப்பாறைக்கும் வழியெல்லாம் நடந்தே வந்தனர்.

வழியில் தாம் கொண்டு வந்த உடைமைகளை பல சமயங்களில் திருடர்களிடம் பறி கொடுத்து வெறுங்கையோடு வள்ளங்கள் மூலம் இலங்கைக்கு வந்தது ஒரு சோகமிக்க நிகழ்வு.

இலங்கையிலுள்ள தலைமன்னாரில் இருந்து அல்லது அரிப்பு முகாமிலிருந்து வரும் வழியில் பல வனாந்தரங்களினை தாண்டியும், வன விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், மலேரியா நோய், கடுமையான வெயில், ஆகிவற்றின் மத்தியில் போதிய உணவு, உடைகள் இன்றி தொடர்ந்தும் நடந்தே வந்தனர்.

பிரயாணம் செய்த பல இடங்களில் குடிநீர் வசதி கிடையாது. வழியில் செத்து மடிந்தோரின் சடலங்கள் வனவிலங்குகளுக்கு உணவாகின.

தென்னிந்தியாவின் கடும் வெப்ப நிலைக்கு முற்றிலும் வேறுபட்ட, குளிர் மிகுந்த மலைநாட்டில் சோர்வுற்ற நிலையில் இம்மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இதனால் அனேகர் நோய்களால் மாண்டு மடிந்ததுவும் சோகமான ஒரு விடயம்.

குறுகிய காலத்தில், குறைந்த செலவில், பெருமளவு இலாபமீட்டுவதே தோட்டத் துரைமார்களின் நோக்கமாக இருந்தது.

இதுவும் முதலாளித்துவ சித்தாந்தத்தின் ஒரு சிறப்பம்சம் அல்லவா.

அதற்கேற்றாற் போல, தொழிலாளர்களது உறைவிடமாக பத்து அடி நீளமும், பத்து அடி அகலமுமான லயன் அறைகள் வழங்கப்பட்டன.

போதிய மருத்துவ வசதிகள் இன்மையால் பலர் பெரியம்மை, விஷ பேதி போன்ற நோய்களுக்கு உள்ளாகி இறந்தனர்.

அவர்களது உயிரற்ற தேகங்கள் மண்ணோடு மண்ணாக, அதே மண்ணின் பசளையாக, பரிமாணம் பெற்றதானது பசுமரத்தாணி போல பதிந்திருந்தது அவர்களுடன் சேர்ந்து வந்த உறவுகளுக்கும், இன பந்துகளுக்கும் மனதை வருடி செல்லும் காலத்தால் மறையாத நினைவுகள், நிகழ்வுகள் அவைகள்.

அன்றைய பிரித்தானிய நிர்வாகத்திற்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்த பொழுது இவர்களுக்கு கிடைத்த பரிசு சாட்டை அடிகள் தான்.

(தொடரும்....)



## சமூக மயமாக்கத்தில்

# பாடசாலைகளின் வகிபங்கு



ஸ்ரீமோகன் ரிஜித்தா,
2ஆம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

கல்விச் சமூக மயமாக்கல் அறிவினையும் நடைமுறைகளின் உலக மற்றும் தலைமுறைகளுக்கு இடையேயான பரிமாற்ற செயன்முறைகளை குறிப்பதாகும். மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான். அவனால் தனித்து வாழ முடியும் என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும். இவ்வாறு சமூகத்துடன் இரண்டற கலந்து வாழும் மனிதன், நொடிக்கு நொடி சமூக மயமாக்கல் எனும் கட்டமைப்பிற்குள் உட்பட்டுக் கொண்டே இருக்கின்றான். ஒரு பிள்ளையை சமூக மயமாக்கல் எனும் பாரிய பரிமாணத்தினை கொண்ட இச்செயற்பாட்டில் பாடசாலைகளின் பங்கு முக்கியமானதாகும்.

பாடசாலை எனும் சமூக மயமாக்கல் முகவரின் இயக்கமானது தனியாகத் தொழிற்படும் ஒரு அமைப்பல்ல. இது சமூகத்தின் இயல்பையும் அதன் மாற்றங்களையும் உள்வாங்கிக் கொண்டு அவற்றை நடைமுறையில் செயல்படுத்தும் ஒரு அமைப்பாகும். பாடசாலைக்குள் வரும் ஒவ்வொரு மாணவர்களும் சமூகம் என்னும் பாரிய வலையமைப்பிலிருந்தே வருகின்றவர்களாவர். ஆதலால் பாடசாலைகள் சமூகத்தைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக காணப்படுகிறது.

அந்த வகையில், இந்த பாடசாலைகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் சமூக மயமாக்கல் செயல்முறையினை நாம் பல்வேறு கோணங்களின் ஊடாக ஆய்வு செய்து பார்க்க முடியும். இதன் முதல் படியாகப் பாடசாலை சூழலுக்கும் அதன் கட்டமைப்புக்கும் உள்வாங்கப்படும் குழந்தைக்கு சமூகத்தையும் அதன் நடத்தைகளையும் அறிமுகப்படுத்துவதைக் குறிப்பிடலாம். ஒரு பிள்ளை பிறந்து குறிப்பிட்ட ஒரு வயதெல்லை வரையும் குடும்பத்துடன் தொடர்புடையதாகவே காணப்படும். குடும்பத்தைத் தாண்டி பாடசாலைக்குள் உள்வாங்கப்படும் போது தான் அக்குழந்தை புதிய சூழலுக்குத் தன்னை பழக்கப்படுத்திக் கொள்கிறது.

தனக்குத் தெரிந்த முகங்களைத் தாண்டி பிற மனிதர்களுடன் பேசி பழகுவதற்குப் பாடசாலையை ஒரு பிள்ளைக்கு அடித்தளமிடுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு தனிமனிதனும் சமூக மயமாக்கத்திற்கான அடிப்படையினையும் பெற்றுக் கொள்கிறான். இதனால் எதிர்காலத்தில் சிறந்த சமூகத் தொடர்புகளையும் பேணக்கூடிய நற்பிரஜைகளும் உருவாக்கப்படுகின்றனர்.

பாடசாலைகளில் முறை சார்ந்த மற்றும் முறை சாராத கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விரு கல்வி செயற்பாடுகள் ஊடாகவும் பிள்ளைகளின் ஆளுமை விருத்தி செய்யப்பட்ட ஆளிடைத் தொடர்பானது மேம்படுத்தப்படுகின்றது.

மேலும், ஆசிரியர்களின் ஆற்றுப்படுத்தலுக்கும் நெறிப்படுத்தலுக்கும் உள்ளாக்கப்படும் போது ஆளிடைத் தொடர்பும் மாணவர்களிடையே விசாலமாக்கப்பட்டு சமூகமயமாக்கம் படிப்படியாக வளர்ச்சி அடைகிறது. இவற்றோடு சமூக மயமாக்கலின் பிரதான அங்கமான சமூகத்தின் மரபு வழி நடத்தை கற்றுக் கொடுக்கப்பட்டு, மாணவர்கள் தன்னைச் சுற்றிய ஒரு சமூக மயமாக்கல் செயல் முறையை வடிவமைத்துக் கொள்கின்றனர். இதே பாடசாலையின் ஊடாக இடம்பெறும் சமூக மயமாகத்தின் முக்கிய ஒரு அங்கமாகும்.

எனவே, பாடசாலைகளை நிர்வாகம் செய்யக் கூடியவர்கள் தம் மீது சுமத்தப்பட்டுள்ள பாரிய கடமைகளை உணர்வது மிக மிக அவசியம். தாம் பொறுப்பில் வைத்திருப்பது எதிர்கால சமுதாயத்தை அலங்கரிக்கும் சிற்பங்களையே ஆகும். ஆகவே, அவர்களுக்கு சமூக மயமாக்களுக்கான அனைத்து அடிப்படைகளையும் விட்டுக் கொடுக்கும் கடமை பாடசாலைகளுக்கு உண்டு. எனவே, இதைச் சரிவர மேற்கொள்ளும் போதே அப்பாடசாலைகளில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு பிள்ளையும் எதிர்கால சமூகத்துடன் சிறந்த முறையில் ஒன்றிப்போகக் கூடியவர்களாகக் காணப்படுவர்.


## அமெரிக்க ஜனாதிபதி யார்?

# கணித்தது தாய்லாந்து நீர் யானை

உலகம் முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று, செவ்வாய்க்கிழமை(05) நடைபெறுகிறது. அந்த நாட்டின் நேரப்படி, நவம்பர் 5ஆம் திகதி காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்நிலையில், தாய்லாந்தில் ‘கா கியோவ்’ திறந்த வெளி உயிரியல் பூங்காவில் உள்ள நீர்யானை ஒன்று ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப்போவது யார் என்பதை கணித்த காட்சிகள் அடங்கிய காணொளி வைரலாகி வருகிறது. அந்த நீர்யானை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவார் என கணித்துள்ளது.

கவனம் ஈர்த்த ‘ஹிப்போ’ - மூ டெங் (Moo Deng) என்ற பெயரிடப்பட்ட அந்த நீர்யானையின் முன் பூங்கா பராமரிப்பாளர்கள் இரண்டு தர்பூசணிப் பழங்களை வைத்தனர். ஒன்றில் ட்ரம்ப் பெயரும், மற்றொன்றில் கமலா ஹாரிஸ் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த குட்டி நீர்யானை நேராக ட்ரம்ப் பெயர் பொறித்திருந்த தர்பூசணியை நோக்கிச் சென்று அதைப் புசித்தது. அருகிலிருந்த மற்றொரு பெரிய நீர் யானை கமலா ஹாரிஸ் பெயர் இருந்த தர்பூசணிப் பழத்தை உண்டது. இதன் மூலம் மூ டெங், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் தான் வெற்றி பெறுவார் என கணித்ததாகக் கூறப்பட்டது. இந்த காணொளி இணையத்தில் வைரலாகி வருகிறது.



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இரு வேட்பாளர்களுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவுவதாகக் கூறப்படுகிறது. அதேபோல், அணி மாறும் மாகாணங்களில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ட்ரம்ப்புக்கு சாதகமாக அமைந்துள்ளது. இந்நிலையில், இந்த ‘ஹிப்போ ஜோசியம்’ காணொளி கவனம் பெற்றுள்ளது.

இத்தகைய பரபரப்புக்கு மத்தியில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. அந்த நாட்டின் நேரப்படி, நவம்பர் 5ஆம் திகதி காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. திங்கட்கிழமை நிலைவரப்படி அமெரிக்க மக்கள் 70 இலட்சத்து 80 ஆயிரம் பேர் ஏற்கெனவே தங்கள் வாக்குகளைச் செலுத்தி விட்டனர். அந்த நாட்டில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், வாக்காளர்கள் எப்போது வேண்டுமானாலும் தபால் மூலம் வாக்களிக்கலாம்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிந்த உடன் அனைத்து மாகாணங்களிலும் வாக்கு எண்ணிக்கை தொடங்கும். பெரும்பாலும் அன்றிரவே புதிய ஜனாதிபதி யார் என்பது உறுதி செய்யப்படும். இழுபறி நீடித்தால், ஒரிரு நாட்களுக்குப் பிறகே முடிவு தெரியவரும். எனினும் ஜனவரி 6ஆம் திகதியே அமெரிக்க ஜனாதிபதி யார் என்பது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். ஜனவரி 20ஆம் அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்பு விழா நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈழ சினிமாவில் ஒரு வளர்ச்சிப் போக்கு

# விமல்ராஜ்ஜின் சாதனைப் பயணம்







ச.அபிசரண்,
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.


ஈழத்தில் சினிமாத்துறையானது தற்பொழுது மிகவும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில், ஈழத்திலே பல்வேறுபட்ட திறமையான இயக்குநர்கள் உருவாகிய வண்ணம் இருக்கின்றார்கள். இவர்களில் பெயர் சொல்லக் கூடிய ஒருவர் தான் விமல்ராஜ். தனது சிறுவயதில் இருந்தே சினிமாத் துறையில் ஆர்வம் கொண்டு பல்வேறு குறுந்திரைப்படங்கள் ஆவணப்படங்கள் மற்றும் முழு நீள திரைப்படத்திற்கான முயற்சிகள் போன்றவற்றை செய்து வருகின்றார். அவருடனான நேர்காணலின் கேள்வி பதில்களை உங்களிடம் வழங்குகின்றோம்.

**கேள்வி :உங்களை பற்றிய ஓர் அறிமுகம்?**

பதில்: சிவலிங்கம் விமல்ராஜ் என்ற நான், யாழ்ப்பாணம் நல்லூரை சேர்ந்தவர். கடந்த 2010ஆம் ஆண்டு சினிமா துறையில் நுழைந்தேன். அதற்கு முற்பட்ட காலத்தில் சினிமா துறையில் எனக்கு அதிக விருப்பம் இருந்தது. ஆனாலும், நான் சினிமாத்துறை என நினைத்து இருந்தது இந்திய சினிமாவை தான். எனக்கு சினிமா பற்றிய ஆர்வத்தைத் தூண்டியது உண்மையிலேயே இந்திய சினிமா தான். இந்திய சினிமாவின் தாக்கத்தின் ஊடாக எனது கதைகளை எவ்வாறு மக்களிடம் கொண்டு செல்லலாம் என யோசித்துச் செயற்பட்டேன். இதன் அடிப்படையில் நான் முதலாவது குறுந்திரைப்படத்தை எடுத்தேன். எனது உறவினர்களையே வைத்து 3G கொண்ட தொலைபேசியிலேயே முதலாவது குறும்படத்தை இயக்கியிருந்தேன்.

**கேள்வி :சினிமாவில் உங்கள் தொடக்கப்புள்ளி எங்கு ஆரம்பமானது?**

பதில்: எனது சினிமா பயணமானது 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் 19 வயதில் ஆரம்பமானது. இத்துறைக்குள் பயணிப்பதற்கான காரணம் சினிமா மீது கொண்ட ஆசையும் தாகமும், இதுவே தொடர்ந்து என் வாழ்க்கையில் தொழிலாக மாற்றியது. இதன் முதற்படியாக என்னுடைய 3G குவாளிட்டியுடன் கூடிய கைத்தொலைபேசியில் 'விடியுமா' என்ற குறும்படத்தை ஆரம்பித்தேன். இதுவே எனது சினிமா ஆரம்பம்.

**கேள்வி:தற்போதைய காலம் வரையிலாக உங்களால் எந்தெந்த வகையான படைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன?**

பதில்: சுமார் 24 குறுந்திரைப்படங்கள், 5 ஆவணப்படங்கள் மற்றும் 10 காணொளி பாடல்கள் என்பவற்றை இயக்கியுள்ளேன்.இயக்குநராக மட்டுமல்லாது, நடிகராக, தயாரிப்பாளராக, ஒளிப்பதிவாளராக மற்றும் திரைக்கதை எழுத்தாளராக என்று பன்முகத்தன்மையுடன் இத்துறையில் பணியாற்றி வருகின்றேன்.

**கேள்வி: உங்கள் படைப்புகள் அவற்றிற்கான அங்கீகாரம் மற்றும் விருதுகள் பற்றிக் கூற முடியுமா?**

பதில்: இதுவரை சர்வதேச ரீதியில் 17 விருதுகளும் தேசிய ரீதியில் 13 விருதுகளையும் பெற்றுள்ளேன். இதுவே எனது கலைத்துறைப் பயணத்தை இன்றுவரை விருத்தியடைய வைத்துள்ளது.

**கேள்வி : உங்கள் படைப்புகளை எவ்வாறான வழிகளில் மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்துள்ளீர்கள்?**

பதில்: சினிமாத்துறையில் நான் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைவதற்காகக் கோயில் திருவிழாக்கள், கிராமங்கள், தெருக்கள், வர்த்தக சந்தைகள் மற்றும் பண்டிகை நாட்களில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் என்னால் உருவாக்கப்பட்ட படைப்புகள் அனைத்தையும் இருவெட்டு வடிவில் விற்பனை செய்தேன். நாட்கள் செல்லச் செல்ல தொழில்நுட்பம் வளர்ச்சியடைய வர்த்தக முறையானது தொழில்நுட்பத்தினூடாக கடத்தப்பட்டது. அந்தவகையில் நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பொருளாதார நிலைப் பின் சென்று கொண்டிருந்தாலும் என்னுடைய படைப்புக்களை ஏதோ ஒருமுறையில் பார்வையாளர்களைச் சென்றடைய முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன். இறுதியாக என்னுடைய படைப்புக்களான எழில் மற்றும் சுகந்தி குறுந்திரைப்படங்கள் கிட்டத் தட்ட 12ற்கும் மேற்பட்ட திரையிடல்களை மேற்கொண்டுள்ளேன். பலரின் எதிர்பார்ப்பிற்கமைய இணைய வழியூடாக மக்களை பார்வையடையவும் செய்த வண்ணமுள்ளேன். எனது பொழுதுபோக்கு நேரத்தைக்கூட கலைத்துறைக்காக சமூக வலைத்தளங்களில் புதிய சிந்தனையுடன் கூடிய மக்களை மகிழ்விப்பதையும் தாண்டி அதற்குள்ளும் சமூகத்திற்கொரு செய்தியைக் கூறிவருகின்றேன் (Tiktok, YouTube,Facebook)








**கேள்வி : சினிமாத் துறையில் நீங்கள் எதிர்கொண்ட மிக முக்கியமான சவால் என்ன?**

பதில்: ஒருமுறை நான் படப்பிடிப்பு தளத்தில் நான் படப்பிடிப்பை மேற்கொண்டிருந்த போது, கைது செய்யப்பட்டு ஒன்பது நாட்கள் சிறையிலிருந்தது என்னால் மறக்க முடியாது. எல்லோருக்கும் சவால்கள் என்றது யதார்த்தமான விடயம். அதையும் தாண்டி தான் எல்லோருமே பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதே மாதிரி தான் எனது பயணமும் இருக்கின்றது.

**கேள்வி :ஆரம்பம் முதல் தற்போது வரை சினிமாத் துறையில் அதிக ஈடுபாட்டுடன் இருப்பதற்கான காரணம் என்ன?**

பதில்: கடந்த கால அனுபவங்கள் மற்றும் நிகழ்கால அனுபவங்கள் என்னை தொடர்ச்சியாக சினிமாவில் பயணிக்க வைத்துக் கொண்டிருக்கின்றது.









**கேள்வி : உங்கள் பார்வையில் ஈழத்து சினிமாவின் அண்மைப் போக்கு எவ்வாறு உள்ளது?**

பதில்: தொழில்நுட்ப ரீதியாக சினிமாவுக்கான முற்னேற்ங்கள் காணப்படுகின்றது. ஆனால், திரைக்கதை ரீதியில் மிகப்பெரும் பின்னடைவை சந்திதித்திருக்கின்றது. அது மாறுமானால் எமது தாய்நாட்டு தமிழ் சினிமா உச்சத்தை தொடும்.

**கேள்வி : உங்களால் உருவாக்கப்பட்ட படைப்புகள் தொடர்பான முழுமையான விபரங்களை கூற முடியுமா?**

பதில்: குறுந்திரைப்படங்கள்

1. விடியுமா
2. வாழ்க்கையே
3. போராட்டம்
4. தோல்கொடு
5. பிஞ்சுமனசு
6. குருதிப்பூக்கள்
7. பூம்புகார்
8. திரைக்கதையில் அவள்
9. அதிசயப்புத்தகம்
10. வெள்ளம்
11. விழிமூடி
12. சட்டென்று
13. பாவை
14. மாறு
15. முதிராவித்துக்கள்
16. காக்கைகக்குஞ்சுகள்
17. குடியுரிமை
18. கருக்குமட்டை
19. தூரப்பயணம்
20. நன்னிலை
21. நிழல்
22. அறிவீர்
23. சுகந்தி
24. எழில்

ஆவணப்படங்கள்

01. நீர்
02. குப்பை
03. விபத்து
04. வாழ்விடமின்றி தவிக்கும் மக்கள்
05. நெடுந்தீவு-2021

10 மேற்பட்ட காணொளிப் பாடல்கள் தயாரித்து, இயக்கி, நடித்தும் இருக்கின்றேன்.

வெப்சீரிஸ்-01 நடித்துள்ளேன். ஏனைய இயக்குநர்களின் படங்கள் மற்றும் பாடல்களில் நடித்திருக்கின்றேன்.


என்னுடைய பெரும்பாலான திரைப்படங்கள் பாராட்டுக்களையும் நல்ல விமர்சனங்களையும் தந்தவண்ணம் இருப்பதனால் தான் நான் தொடர்ச்சியாக இத்துறையில் பயணித்துக்கொண்டிருக்கின்றேன். விமல் என்றால் ஒரு சினிமாத் கலைஞன் அது நான் இயக்கிய படங்கள், நடிப்பு என்பவற்றின் மூலமே பிரதிபலிக்கப்படுகின்றேன்.

**கேள்வி : உங்களுடைய அடுத்த கட்ட முயற்சி பற்றி கூற முடியுமா?**

பதில்: எனது அடுத்த படைப்பாக முழு நீளத்திரைப்படத்தை உருவாக்குவதற்கான ஆயத்தப் பணிகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றேன்.

19 வயதில் ஆரம்பமாகிய இவரது சினிமா பயணம் ஆனது இற்றை வரைக்கும் பல குறுந்திரைப்படங்கள் ஆவணப்படங்கள் என்பவற்றையும் தாண்டி தற்பொழுது முழுநீளத் திரைப்படத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

உண்மையிலேயே விமல்ராஜ் அவர்கள் ஒரு சினிமா துறையில் காணப்படும் இளைஞர்கள் அனைவருக்கும் முன்னுதாரணமாகக் காணப்படுவதோடு ஈழத்து சினிமாத் துறையில் வளர்ச்சி பெற்று வரும் ஒரு சிறந்த கலைஞன் ஆகவும் காணப்படுகின்றார். உண்மையிலேயே ஈழத்தில் உருவாகின்ற இயக்குநர்களுக்கு இற்றை வரைக்கும் சரியானதொரு அங்கீகாரம் கிடைக்கப் பெறாத நிலையே உள்ளது ஆகையால் ஈழத்தில் வளர்ந்து வரும் இயக்குநர்களுக்கு எங்களாலான ஆதரவுகளை வழங்குவோம்.



# தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம்

உலகெங்கிலும் மில்லியன் கணக்கான உயிர்களைப் பாதிக்கும் ஒரு வலிமையான எதிரி புற்றுநோய். தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம், ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த பேரழிவு நோய்க்கு எதிரான போராட்டத்தில் முன்கூட்டியே கண்டறிதல், தடுப்பு மற்றும் கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் முக்கிய நினைவூட்டலாகச் செயல்படுகிறது. இந்த கட்டுரையில், தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினத்தின் முக்கியத்துவம், புற்றுநோய் பரிசோதனைகளின் இன்றியமையாமை மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரங்களின் முக்கிய பங்கு ஆகியவற்றை நாங்கள் ஆராய்வோம்.

## விழிப்புணர்வு தின தோற்றம்

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் முதன்முதலில் 2014 இல் இந்திய அரசால் நிறுவப்பட்டது. நவம்பர் 7 ஆம் திகதி, மேரி கியூரியின் பிறந்தநாளை நினைவுகூருகிறது, அவரது கதிரியக்கத்தன்மை பற்றிய அற்புதமான ஆராய்ச்சி புற்றுநோய் சிகிச்சையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. புற்றுநோயைப் பற்றிய பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, முன்கூட்டியே கண்டறிவதை ஊக்குவிப்பது மற்றும் புற்றுநோயை உருவாக்கும் அபாயத்தைக் குறைப்பதற்காக ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்குத் தனிநபர்களை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பரிசோதனைகளின் முக்கியத்துவம்

ஆரம்பகால கண்டறிதல் வெற்றிகரமான சிகிச்சை மற்றும் மீட்புக்கான வாய்ப்புகளைக் கணிசமாக அதிகரிக்கும். புற்றுநோய் பரிசோதனைகள் நோயை அதன் ஆரம்ப நிலைகளில் கண்டறிவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வழக்கமான புற்றுநோய் பரிசோதனைகள் ஏன் இன்றியமையாதவை என்பது இங்கே:

**உயிர்களைக் காப்பாற்றுகிறது**

புற்றுநோய், அதன் ஆரம்ப கட்டங்களில், பெரும்பாலும் குறைந்த அறிகுறிகளுடன் அல்லது அறிகுறிகள் இல்லாமல் இருக்கும். மேமோகிராம்கள், பேப் ஸ்மியர்ஸ் போன்ற திரையிடல்கள் உட்பட வழக்கமான சோதனைகள், கொலோ னோஸ்கோபி, மற்றும் தோல் சோதனைகள், புற்றுநோயானது மிகவும் கடுமையான நிலைக்கு முன்னேறும் முன் கண்டறிய முடியும். ஆரம்பகால கண்டறிதல் பெரும்பாலும் மிகவும் பயனுள்ள சிகிச்சை விருப்பங்களுக்கு வழிவகுக்கிறது மற்றும் உயிர் பிழைப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது.

**சிகிச்சையின் சிக்கலைக் குறைத்தல்**

புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், தேவைப்படும் சிகிச்சையானது பொதுவாகக் குறைவான ஆக்கிரமிப்பு மற்றும் சிக்கலானதாக இருக்கும். இது குறைவான பக்கவிளைவுகளுக்கு வழிவகுக்கும், குறுகிய மீட்பு காலம் மற்றும் நோயாளியின் ஒட்டுமொத்த சிறந்த வாழ்க்கைத் தரம். ஆரம்ப நிலை புற்றுநோய் சிகிச்சைகள் உடலில் பரவலான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய முறையான சிகிச்சைகளுக்குப் பதிலாக உள்ளூர் மயமாக்கப்பட்ட நடைமுறைகளை அடிக்கடி உள்ளடக்கியது.

## செலவு–செயல்திறன்

புற்றுநோயை அதன் ஆரம்ப நிலைகளில் சிகிச்சையளிப்பது மிகவும் பயனுள்ளது மட்டுமல்ல, அதிக செலவு குறைந்ததாகும். மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சைகள் மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கலாம், இதில் நீண்டகால மருத்துவமனையில் தங்குவது, பல சிகிச்சைகள் மற்றும் விரிவான மறுவாழ்வு ஆகியவை அடங்கும். வழக்கமான சோதனைகள் மூலம் முன்கூட்டியே கண்டறிதல் சிகிச்சை செயல்முறையை எளிதாக்குவதன் மூலம் இந்த செலவுகளைக் குறைக்கலாம்.

## அணுகுமுறை

தடுப்பு என்பது பெரும்பாலும் சிறந்த சிகிச்சையாகும், இது புற்றுநோய்க்கு உண்மையாக உள்ளது. புற்றுநோயைத் தடுப்பதற்கான ஒரு செயலூக்கமான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது நோயை உருவாக்கும் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கும். இங்கே சில முக்கிய உத்திகள் உள்ளன:

**வாழ்க்கை முறை தேர்வுகள்**

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பராமரிப்பது புற்றுநோயைத் தடுப்பதில் மிக முக்கியமானது. பழங்கள், காய்கறிகள் மற்றும் முழு தானியங்கள் நிறைந்த சீரான உணவு, வழக்கமான உடல் செயல்பாடு மற்றும் புகையிலை மற்றும் அதிகப்படியான மது அருந்துவதைத் தவிர்ப்பது ஆகியவை இதில் அடங்கும். இந்த வாழ்க்கை முறை தேர்வுகள் நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துவதோடு, புற்றுநோயின் அபாயத்தையும் குறைக்கும்.

## தடுப்பூசிகள்

வழக்கமான புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகள் சில வகையான புற்றுநோய்களைத் தடுக்கலாம். உதாரணமாக, தி மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்கும், மேலும் ஹெபடைடிஸ் பி தடுப்பூசி கல்லீரல் புற்றுநோயின் அபாயத்தைக் குறைக்கும். வழக்கமான திரையிடல்கள், முன்பு குறிப்பிட்டபடி, ஆரம்ப, மிகவும் சிகிச்சையளிக்கக்கூடிய கட்டத்தில் புற்றுநோயைக் கண்டறிய முடியும்.

## விழிப்புணர்வு மற்றும் கல்வி

புற்றுநோயின் ஆபத்து காரணிகள் மற்றும் அறிகுறிகளைப் பற்றி தனக்கும் மற்றவர்களுக்கும் கல்வி கற்பது தடுப்புக்கான முக்கியமான அம்சமாகும். விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் கல்வித் திட்டங்கள் மதிப்புமிக்க தகவல்களைப் பரப்பலாம், தனிநபர்கள் தங்கள் உடல்நலம் குறித்து தகவலறிந்த முடிவுகளை எடுக்க அதிகாரம் அளிக்கலாம்.

## பிரசாரங்களின் பங்கு

புற்றுநோய் விழிப்புணர்வு பிரசாரங்கள் நோய், அதன் தடுப்பு மற்றும் முன்கூட்டியே கண்டறிவதன் முக்கியத்துவம் பற்றிய அறிவைப் பரப்புவதில் கருவியாக உள்ளன. இந்த பிரச்சாரங்கள் பொதுச் சேவை அறிவிப்புகள், சமூக ஊடக முன்முயற்சிகள், சமூக நிகழ்வுகள் மற்றும் கல்விப் பட்டறைகள் உட்பட பல்வேறு வடிவங்களை எடுக்கலாம்.

**பொது அறிவு பெருகும்**

## விழிப்புணர்வு பிரசாரங்கள்

புற்றுநோய், அதன் ஆபத்து காரணிகள் மற்றும் முன்கூட்டியே கண்டறிவதன் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பொது அறிவை அதிகரிப்பதன் மூலம், வழக்கமான சோதனைகளைத் திட்டமிடுதல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுதல் போன்ற தனிநபர்கள் தங்கள் ஆரோக்கியத்தை நோக்கிச் செயல்படுவதற்கு இந்த பிரச்சாரங்கள் ஊக்குவிக்கின்றன.

**களங்கத்தைக் குறைக்கும்**

புற்றுநோய் பெரும்பாலும் ஒரு களங்கத்துடன் சேர்ந்து, சரியான நேரத்தில் மருத்துவ உதவியை நாடுவதைத் தடுக்கிறது. புற்றுநோயைப் பற்றிய உரையாடல்களை இயல்பாக்குவதன் மூலமும், வயது, பாலினம் அல்லது பின்னணியைப் பொருட்படுத்தாமல் யாரையும் பாதிக்கக்கூடிய ஒரு நோய் என்பதை வலியுறுத்துவதன் மூலம் இந்த இழிவைக் குறைக்க விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செயல்படுகின்றன.

## ஆராய்ச்சி மற்றும் நிதி உதவி

பல புற்றுநோய் விழிப்புணர்வு பிரசாரங்கள் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் நோயாளி ஆதரவு சேவைகளுக்கு நிதி திரட்டுவதில் கவனம் செலுத்துகின்றன. புதிய சிகிச்சைகளை உருவாக்குவதற்கும், ஏற்கனவே உள்ள சிகிச்சைகளை மேம்படுத்துவதற்கும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்குவதற்கும் இந்த நிதிகள் முக்கியமானவை. இந்த பிரச்சாரங்களில் பங்கேற்பதன் மூலம் அல்லது நன்கொடை அளிப்பதன் மூலம், தனிநபர்கள் புற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டு முயற்சியில் பங்களிக்க முடியும்.

**நடவடிக்கைக்கான அழைப்பு**

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் தனிநபர்கள், சுகாதார வழங்குநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு புற்றுநோயைத் தடுப்பதற்கும் முன்கூட்டியே கண்டறிவதற்கும் முன்னுரிமை அளிப்பதற்கான ஒரு அழைப்பாக செயல்படுகிறது. இதில் ஈடுபட சில வழிகள்:

## வழக்கமான சோதனைகளை திட்டமிடுங்கள்

புற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்று முன்கூட்டியே கண்டறிதல் ஆகும். அட்டவணை வழக்கமான சோதனைகள் மற்றும் சுகாதார நிபுணர்களால் பரிந்துரைக்கப்படும் திரையிடல்கள். குடும்பத்தினரையும் நண்பர்களையும் அவ்வாறே செய்ய ஊக்குவிக்கவும். விழிப்புணர்வு பிரசாரங்களில் பங்கேற்கவும் உள்ளூர் அல்லது தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரங்களில் ஈடுபடுங்கள். இது நிகழ்வுகளில் பங்கேற்பது, சமூக ஊடகங்களில் தகவல்களைப் பகிர்வது அல்லது புற்றுநோய் தடுப்பு மற்றும் ஆதரவிற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனங்களுடன் தன்னார்வத் தொண்டு செய்வது ஆகியவை அடங்கும்.

## கொள்கை மாற்றங்களுக்கான வழக்கறிஞர்

புற்றுநோய் தடுப்பு, ஆராய்ச்சி மற்றும் சுகாதார அணுகலை ஊக்குவிக்கும் கொள்கைகளுக்கு வழக்கறிஞர். புற்றுநோய் ஆராய்ச்சிக்கு நிதியளிக்கும் ஆதரவு சட்டங்கள், முன்கூட்டியே கண்டறிதல் திட்டங்களுக்கான ஆதாரங்களை வழங்குதல் மற்றும் அனைத்து தனிநபர்களுக்கும் தேவையான மருத்துவ பராமரிப்புக்கான அணுகலை உறுதி செய்கிறது.

ஜப்பான்

புகுஷிமா அணுமின் நிலையத்துக்கு

# மீண்டும் பூட்டு



ஜப்பானில் உள்ள புகுஷிமா அணுமின் நிலையம் மீண்டும் மூடப்பட்டது.

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு 9 ரிக்டர் அளவிலான பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமாவில் உள்ள ஒனகாவா அணுமின் நிலையம் கடுமையாக சேதமடைந்தது. இதனையடுத்து, அந்த அணுமின் நிலையம் மூடப்பட்டது.

இங்கு பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததால் கடந்த 29ஆம் திகதி புகுஷிமா அணுமின் நிலையம் திறக்கப்பட்டது. இந்நிலையில், விரைவில் அங்கு மின் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், நியூட்ரான் தரவு தொடர்பான எந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் திறக்கப்பட்ட 5 நாட்களில் புகுஷிமா அணுமின் நிலையம் மீண்டும் மூடப்பட்டது.

வடகொரியா

மீண்டும் ஏவுகணை

## சோதனை நடத்தியது வடகொரியா

வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

கிழக்கு கடல் பகுதியை நோக்கி பல்வேறு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை வடகொரிய இராணுவம் சோதனை செய்ததாக ஜப்பான் மற்றும் தென் கொரியா அரசுகள் தெரிவித்துள்ளன.

அந்த ஏவுகணைகள் சுமார் 400 கி.மீ. தூரம் வரை பாய்ந்து சென்று கடலில் விழுந்ததாக கூறப்படுகிறது. அமெரிக்காவில் தேர்தல் நடைபெற உள்ள சூழலில், வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியிருப்பது சர்வதேச அரசியலில் பேசுபொருளாகியுள்ளது.



தாய்லாந்து

தாய்லாந்து செல்ல இனி இந்தியர்களுக்கு

## விசா தேவையில்லை



தாய்லாந்து அரசாங்கம் இந்தியர்களுக்கு விசா இல்லாத நுழைவை அறிவித்துள்ளது.

இனி, தாய்லாந்து செல்லும் இந்தியப் பயணிகள் முன்னதாகவோ தாய்லாந்தில் இறங்கிய பிறகோ விசா பெற வேண்டிய அவசியம் இல்லை.

இதற்கமைய, நவம்பர் 11ஆம் திகதி நிறைவடைய இருந்த விசா சலுகையை காலவரம்பின்றி தாய்லாந்து அரசு நீடித்துள்ளது.

இதன் மூலம் இந்திய குடிமக்கள் நீண்ட நாட்கள் விசா இல்லாமல் தாய்லாந்தில் தங்கி வரலாம். நவம்பர் 11ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த விசா தளர்வு தற்போது நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதிய விதிமுறைகளின் படி, இந்தியர்கள் தாய்லாந்தில் விசா இல்லாமல் 60 நாட்கள் வரை தங்கி வர அனுமதிக்கப்படுகிறார்கள்.

உள்ளூரில் இருக்கும் 'இமிகிரேஷன்' அலுவலகத்தில் விண்ணப்பித்து, 30 நாட்களுக்கு வருகையை 'எக்ஸ்டென்ட்' செய்து கொள்ளலாம். இந்தியர்களுக்கு விசா இல்லாத நுழைவை நீட்டித்திருக்கும் காரணத்தினால் தாய்லாந்துக்கு சுற்றுலா செல்ல திட்டமிடும் இந்தியர்களுக்கு சுற்றுலா செல்வது மிகவும் எளிதாக மாறியுள்ளது.

ஆவணங்களே இல்லாத புதிய நடைமுறையின் காரணமாக ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் வரையில் இந்தியா சுற்றுலா பயணிகளின் வரத்து 16.17 மில்லியனாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வார இறுதி விடுமுறையை பயன்படுத்தி தாய்லாந்துக்கு செல்லும் இந்தியர்களும் அதிகரித்துள்ளனர்.



தமிழகம்

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவாகவுள்ளது

## புதிய புயல் சின்னம்

**“ தமிழகத்தில் 6 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் மழை பெய்யக் கூடும் எனவும் 8ஆம் திகதி முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது**

தென்கிழக்கு வங்கக்கடல், அந்தமான் தீவுகள் அருகே, நாளை புதன்கிழமை (7) புதிய புயல் சின்னம் உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடலில் அந்தமான் தீவுகள் அருகே நாளை புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது புயல் சின்னமாக வலுவடைந்து தமிழக கரையை நெருங்கலாம்.

இதன் காரணமாக, தமிழகத்தில் 6 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் மழை பெய்யக் கூடும் என்றும் 8ஆம் திகதி முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யலாம் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



தமிழகம்

கமலா ஹாரிஸ் வெற்றி பெற

## பூர்வீக கிராமத்தில் சிறப்பு பூஜை

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கமலா ஹாரிஸ் வெற்றிபெற வேண்டி திங்கட்கிழமை(4) அவரது பூர்வீக கிராமமான துளசேந்திரபுரத்திலுள்ள தர்ம சாஸ்தா கோவிலில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றுள்ளன.

மேலும் அவரை வாழ்த்தி கிராமம் முழுவதும் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் மக்கள் சிலர், இனிப்புகளை வழங்கி கொண்டாடி வருகிறார்கள். கமலா ஹாரிஸின் தாய்வழி தாத்தாவின் பூர்வீகம் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள துளசேந்திரபுரமாகும்.

இதேபோல், மதுரை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கமலா ஹாரிஸ் வெற்றிக்காக சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

குஜராத்

## காருக்குள் விளையாடிய சிறுவர்கள் பலி

நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றுக்குள் விளையாடி கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 சிறுவர்கள் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டத்தில் சனிக்கிழமை(2) இடம்பெற்றுள்ளது.

குறித்த 4 சிறுவர்கள் உட்பட 7 சிறுவர்கள் வீட்டுக்கு அருகே விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு நிறுத்தப்பட்டிருந்த காருக்குள், அந்த 4 சிறுவர்களும் ஏறி விளையாடியுள்ளனர். கார் கதவுகள் தானாகவே பூட்டிக்கொண்டதால், சிறுவர்களால் கதவை மீண்டும் திறக்கமுடியவில்லை.

இதனால் சிறுவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த 4 சிறுவர்களும் 2 முதல் 7 வயதுக்கு உட்பட்டவர்கள் என கூறப்படுகின்றது.



இன்று மூன்றாவது போட்டி:

# தொடரைக் கைப்பற்றுமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது பார்படோஸில் இன்றிரவு 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளும், இரண்டாவது போட்டியில், இங்கிலாந்தும் வென்ற நிலையில் தீர்மானமிக்க இப்போட்டியில், இங்கிலாந்து துடுப்பாட்டவீரர்களை குறிப்பாக அணித்தலைவர் லியம் லிவிங்ஸ்டோனைக் கட்டுப்படுத்துவதிலேயே தொடரின் முடிவு தங்கியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்த வரையில் ஷாமர் ஜோசப்புக்குப் பதிலாக அல்ஸாரி ஜோசப் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுவதோடு, ஜேடன் சியல்ஸை றொமாரியோ ஷெப்பர்ட் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மறுபக்கமாக இங்கிலாந்து அணியில் ஜோர்டான் கொக்ஸ் இரண்டு போட்டிகளிலும் பிரகாசித்திருக்காத நிலையில் மிஷெல் பெப்பர் மூலம் அவரைப் பிரதியிடக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

சந்தேகத்துக்கிடமானதா

## ஷகிப்பின் பந்துவீச்சு பாணி

இங்கிலாந்தின் கவுண்டி போட்டிகளில் சர்ரே அணிக்காக விளையாடும்போது பங்களாதேஷின் ஷகிப் அல் ஹஸனின் பந்துவீச்சுப்பாணி குறித்து நடுவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஷகிப்புக்கு பந்துவீச்சு பாணி குறித்து ஆய்வை மேற்கொள்ளுமாறு இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் வினவப்பட்டுள்ளார்.

முறைப்பாடு செய்யப்பட்ட செப்டெம்பரில் நடைபெற்ற போட்டியில் 63 ஓவர்கள் வீசியிருந்த ஷகிப் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

விளையாடுவதற்கு ஷகிப் மீது தடை விதிக்கப்படவில்லை என்றபோதும், அனுமதிக்கப்பட்ட இடமொன்றில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மேலதிக சோதனைகளுக்கு உள்ளாக வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இருபதுக்கு–20 போட்டிகளில்

## இங்கிலாந்தின் விக்கெட் காப்பாளராக ஸோல்ட்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இங்கிலாந்தின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் ஜொஸ் பட்லர் அணிக்குத் திரும்பினாலும் விக்கெட் காப்பாளராக பில் ஸோல்டே கடமையாற்றவுள்ளார்.

இங்கிலாந்தின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணித்தலைவர் பட்லர், தனது 108 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 106இல் விக்கெட் காப்பாளராகவே கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.



## றோமாவின் முகாமையாளராக லம்பேர்ட்?



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான றோமாவின் அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கும் முகாமையாளர் இவான் ஜுரிசிச்சை நீக்க றோமா தீர்மானித்தால், றோமாவைப் பொறுப்பேற்பதற்கான நபரொருவராக இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் செல்சி மற்றும் எவெர்ற்றனின் முன்னாள் முகாமையாளர் பிராங்க் லம்பேர்ட்டும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.



## செல்சியிலிருந்து வெளியேறும் என்ஸோ பெர்ணாண்டஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் மத்தியகளவீரரான என்ஸோ பெர்ணாண்டஸ் தனதிடத்தை அணியில் இழந்துள்ள நிலையில் அவரைக் கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவும், இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனும் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செல்சியுடன் 2032ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தைக் கொண்டு பெர்ணாண்டஸ் தனதிடத்துக்காக போராடுவதில் உறுதியாயுள்ளாரெனக் கூறப்படுகின்றபோதும், சில மாதங்களாக மாற்று வீரராக இருந்தால் தொடர்ந்தும் அணியில் இருப்பதில்லையென அவர் முடிவெடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 06 நவம்பர் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.